ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

अनृतं साहसं माया मूर्खत्वमतिलोभता ।
अशौचं निर्दयत्वं च स्त्रीणां दोषास्स्वभावजाः ॥

அந்ருதம் ஸாஹஸம் மாயா மூர்க்கத்வமதிலோபதா ।
அசௌசம் நிர்தயத்வம் ச ஸ்த்ரீணாம் தோஷாஸ்ஸ்வபாவஜா: ॥

பொய்பேசுகிறது. பிறர் சொல்வது. உசிதமாயிருந்தாலும் அதை அங்கீகரிக்காமல் தன்னிஷ்டத்தையேபூர்த்திசெய்யவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறது. ருஜுவில்லாமல் கபடமாய் நடக்கிறது. தமக்குத்தோன்றியவாறு கெட்டவழிகளில் செல்வது. பிறர்பொருளை சாஸ்திரவிரோதமாய்தாமடையவேண்டுமென்றுஎப்பொழுதும் இச்சிப்பது. மனம் வாக்கு காயம் என்கிற இம்மூன்றுகளிலும் அசுத்தி கருணையில்லாமலிருப்பது என்கிற தோஷங்கள் ஸ்திரீகளுக்கு இயற்கையாய் ஜன்மாவுடன் கூடவே ஏற்பட்டிருக்கின்றன.

ஸதிரீகளிடம் ஸ்வபாவமாகவே பல தோஷங்களிருக்கிறபடியால் அவர்களுடைய பழக்கம் நமக்கு அவசியம் வேண்டியிருந்தாலும் நாம் ஜாக்கிரதையாகஇருந்தால்மட்டும அந்த தோஷங்களாலேறபடும் கஷ்டங்களை அனுபவிக்காமலிருக்கலாம்.

பொதுவாய் புருஷர்களால் அனுபவிக்கப்படும் பல கஷ்டங்களுக்கு ஸ்திரீகளே காரணமாகிறார்கள் என்று

स्त्रियोहि मूलं कलहस्य पुंसः स्त्रियोहि मूलं व्यसनस्य पुंसः ।
स्त्रियोहि मूलं नरकस्य पुंसः तज्जागरूको भव तासु नित्यम् ॥

ஸ்த்ரியோஹி மூலம் கலஹஸ்ய பும்ஸ:
ஸ்த்ரியோஹி மூலம் வ்யஸநஸ்ய பும்ஸ: ।
ஸ்த்ரியோஹி மூலம் நரகஸ்ய பும்ஸ:
தஜ்ஜாகரூகோ பவ தாஸு நித்யம் ॥

என்று ஒருபெரியாரும் கூறியுள்ளார். ஆகையால் நாம் ஜாக்கிரதையாயிருந்தால் அவர்களுக்கும்நல்லறிவை புகட்டி நாமும் சுகத்தையடையலாம்

உப-பத்திராதிபர்

# மோக்ஷாதிகாரி நிரூபணம்.

(741-வது பக்கத்தொடர்ச்சி)

मृद्दारुकांस्य लोहैश्च पाषाणेनापि निर्मिता ।
गृहिणा प्रतिमा कार्या शिवं शश्वदभीप्सता ॥
आयुः श्रियं कुलं धर्मं पुत्रानाप्नोति तैः क्रमात् ।

ம்ருத்தாருகாம்ஸ்ய லோஹைஶ்ச பாஷாணேநாபி நிர்மிதா।
க்ருஹிணா ப்ரதிமா கார்யா ஶிவம் ஶஶ்வதபீப்ஸதா॥
ஆயு: ஶ்ரியம் குலம் தர்மம் புத்ராநாப்நோதி தை:
[க்ரமாத்॥

எப்பொழுதும் க்ஷேமத்தை விரும்புகின்ற கிருஹஸ்தாச்ரமியானவன் மண், கட்டை, வெண்கலம், லோஹம், கல் என்கிற இவைகளுக்குள் ஏதாகிலுமொன்றினுல் பகவன் மூர்த்தியைச் செய்து பூஜிப்பானுகில்முறையேஆயுள் ஐசுவரியம் குலம் தர்மம் புத்திரன் இவைகளை அடைவான்.

बिल्ववृक्षं समाश्रित्य योमन्त्रान् विधिना जपेत् ।
एकेन दिवसेनैव तत्पुरश्चरणं भवेत् ॥
यस्तु बिल्ववने नित्यं कुटीं कृत्वा वसेन्नरः ।
सर्वे मन्त्राः प्रसिद्ध्यन्ति जपमात्रेण केवलम् ॥

பில்வவ்ருக்ஷம் ஸமாஶ்ரித்ய யோமந்த்ராந் விதிநா ஜபேத்।
ஏகேந திவஸேநைவ தத்புரஶ்சரணம் பவேத்॥
யஸ்து பில்வவநே நித்யம் குடீம் க்ருத்வா வஸேந்நர:।
ஸர்வே மந்த்ரா: ப்ரஸித்த்யந்தி ஜபமாத்ரேண கேவலம்॥

பில்வமரத்தடியிலுட்கார்ந்து மந்திரங்களை ஜபித்து ஒரு நாளிலே யே அவைகளின் புரச்சரணங்களைச் செய்தாலும் பில்வவனத் தில் குடிஸைகட்டிகொண்டு அதில் வஸித்துக்கொண்டு மந்திர ஜபம் செய்தாலும் ஜபித்த மாத்திரத்திலேயே ஸகலமந்திரங்களும் ஸித்தியாகின்றன

पर्वताग्रे नदीतीरे बिल्वमूले शिवालये ।
अग्निहोत्रे केशवस्य सन्निधौ च जपेत्तु यः ॥
नैवास्य विघ्नं कुर्वन्ति दानवायक्षराक्षसाः ।
तं नस्पृशन्ति पापानि शिवसायुज्य मृच्छति ॥

பர்வதாக்ரே நதீதீரே பில்வமூலே ஶிவாலயே ।
அக்நிஹோத்ரே கேஶவஸ்ய ஸந்நிதௌ வ ஜபேத்து ய: ।
நைவாஸ்ய விக்நம் குர்வந்தி தாநவாயக்ஷராக்ஷஸா: ।
தம் நஸ்ப்ருஶந்தி பாபாநி ஶிவஸாயுஜ்ய ம்ருச்சதி ॥

மலையின் சிகரம், நதிதீரம், பில்வவிருக்ஷத்தின் அடி, சிவாலயம் அக்னிஹோத்ரசாலை, ஸ்ரீ மஹாவிஷ்ணுஸந்நிதி இந்தஇடங்களில் எவன் ஜபிக்கிறானோ அவனுக்கு அசுராள், யக்ஷாள், ராக்ஷஸாள், முதலானவர்களால் யாதொரு விக்னமுமேற்படமாட்டாது. அவ னைப் பாபமும் தொடுகிறதில்லை. அவன் சிவ ஸாயுஜ்யத்தையும் முடிவிலடைகிறான்.

स्थण्डिलेवा जले वह्नौ वायावाकाशएववा ।
गुरौ स्वात्मनि वायोर्मां पूजयेत् प्रयतोनरः ॥
सकृत्स्नं फलमाप्नोति दलपातेन राघव ।

ஸ்தண்டிலேவா ஜலே வஹ்நௌ வாயாவாகாஶஏவவா ।
குரௌ ஸ்வாத்மநி வாயோர்மாம் பூஜயேத் ப்ரயதோநர: ॥
ஸக்ருத்ஸ்நம் ஃபலமாப்நோதி தலபாதேந ராகவ ।

ஹே ராகவா ! ரகுவம்சத்திற்றோன்றிய மன்னர்களுக்குள் சிறந்த வனான ஹே ராம பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாயம், குரு, தனது ஆன்மா என்கிற இவைகளில் என்னை எவன் பரிசுத்தனா யிருந்துகொண்டு பூஜிக்கிறானோ, அவன் ஒரு தளத்தால் பூஜித்தா லும் ஸகலபலன்களையும் அடைகின்றான்.

आत्मपूजा समा नास्ति पूजा रघुकुलोद्वह ।
मत्सायुज्यमवाप्नोति चण्डालोऽप्यात्मपूजया ॥
इत्थं श्रीशंकरोऽवादीत् राघवाय महात्मने ।

ஆத்மபூஜாஸமா நாஸ்தி பூஜா ரகுகுலோத்வஹ ।
மத்ஸாயுஜ்யமவாப்னோதி சண்டாளோப்யாத்மபூஜயா ।
இத்தம் ஶ்ரீஶங்கரோऽவாதீத் ராகவாய மஹாத்மனே ।

ஹே ரகுகுல சிரேஷ்ட ஆத்மபூஜைக்குச் சமமான வேறு பூஜை கிடையாது. சண்டாளனுக இருந்தாலும் இந்தப் பூஜையைச் செய்தால் என்னுடைய ஸாயுஜ்யமென்கிற மோக்ஷத்தை அடைகிருன் என்று இவ்விதம் மஹாத்மாவான ஸ்ரீ ராகவனையும் பொருட்டு ஸ்ரீ சங்கரர் உபதேசித்திருக்கிருர்.

இதினுல் மோக்ஷத்தையடையக்கூடிய அதிகாரி இவ்விதமிருக்க வேண்டுமென்றும் மோக்ஷத்தைப்பெற அருகமில்லாதவர்களுடைய இலக்கணமும் சிவன் விஷ்ணு ஆசார்யன் இவர்களிடம் துவேஷபுத்தியிருந்தால் பந்தம் விலகாதென்றும் சிவபக்தி அவசியம் வேண்டுமென்றும் காசி முதலிய புண்யக்ஷேத்திரங்களில் மிருதியடைந்தவர்களுக்கு தாரகமந்திரோபதேசம் செய்யப்படுகிறதென்றும் பகவந்நாமஸங்கிர்த்தனத்திலும் பகவத்ஸ்வரூபதியானத்திலும் எல்லா ஜனங்களுக்கும் எப்பொழுதும் அதிகாரமுண்டென்றும் அதிலும் தியானமென்பது மிகச்சிறந்ததென்றும் மரணகாலத்தில் பகவத்ஸ்வரூபத்தையாவது பஞ்சாக்ஷரமந்திரத்தையாவது அவசியம் ஸ்மரித்தால்தான் முக்தி ஏற்படுமென்றும் உலகத்தையும் தன்னையும்சிவஸ்வரூபமாகப்பார்க்கும்சக்திபெற்றவனுக்கு இதாகர்மாக்கள் இல்லாவிட்டாலும் பாதகமில்லை என்றும் எக்தெந்தவிடங்களில் பகவானை ஆராதிக்கலாமென்பதையும் ஆத்மபூஜையே மிகச்சிறந்ததென்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஸகல ஜனங்களும் தம்தம் சக்திக்கியன்றவாறு பகவானையாராதித்துப் பிரவிப்பிணியையகற்றி உத்தமமான மோக்ஷசுகத்தைப் பெற்று சுகித்திருக்கவேண்டுமாறு பிரார்த்திக்கின்ருேம்.

உபபத்திராதிபர்.

# “ சூத்ரன் ”

## என்ற பதத்தைப் பற்றிய விசாரம்.

சென்ற சில வருஷங்களாக தென்னிந்தியாவில் வகுப்புவாரி ப்ரதிநிதித்வ விஷயமாயும் உத்தியோக முறைமையிலும் ப்ராமணர்களிடம் துவேஷங்கொண்ட ப்ராமணரல்லாத இந்துக்களில் சிலர் மநுஸ்மிருதியில் சூத்ரன் என்பதற்கு “தேவடியாள் மகன்” “வேசி மகன்” என்று சொல்லியிருப்பதாக ப்ரசாரஞ்செய்து ஸாமாந்யர்களை வஞ்சித்து விஷமங்களைச்செய்து வருவதுமன்னியில் மநுஸ்மிருதியை பஹிஷ்கரிக்கவேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றியும், மநுஸ்மிருதி தங்கள் சுயமரியாதைக்கு இடந்தாவில்லையென்று சொல்லிக்கொண்டு சிலகூட்டங்களில் மநுஸ்மிருதி புஸ்தகத்தைக் கொளுத்திபதாகவும் தெரிவதால் இதன் உண்மையைப்பற்றி இப்பொழுது சர்ச்சை செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. இதற்கு மநுஸ்மிருதியில் அடியிற் குறிப்பிட்டிருக்கும் எட்டாவது அத்தியாயம், 415-வது சுலோகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பே காரணம்.

ध्वजाहृतो भक्तदासो गृहजः क्रीतदात्रिमौ ।
पैत्रिको दण्डदासश्च सप्तैते दासयोनयः ॥

த்வஜாஹ்ருதோ பக்ததாஸோ க்ருஹஜ: க்ரீதத்ரிமௌ ।
பைத்ரிகோ தண்டதாஸஸ்ச ஸப்தைதே தாஸயோநய: ॥

இதின் அர்த்தம் (1) ध्वजाहृतः, (2) भक्तदासः, (3) गृहजः, (4) क्रीतः, (5) दत्त्रिमः, (6) पैत्रिकः, (7) दण्डदासः என்று வேலைக்காரர்கள் ஏழு வகை.

மநுஸ்மிருதி சுமார் 55-வருஷங்களுக்குமுன் முதல்முதல் புதுவை நா. முத்துரெங்கசெட்டியார் கேட்டுக்கொண்டபடி திருவைந்திரபுரம் கோமாண்டூர் இளையவல்லி இராமாநுஜாசாரியாரால் ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பு. க. சுப்பராயமுதலியாரால் பிழைபறத் திருத்துவித்த சுத்தப் பிரதிக்கிணங்க ஷை முத்துரெங்கசெட்டியார் சகோதரராகிய முத்துக்கோவிந்தசெட்டியாரால் சென்னை ஸ்ரீ பத்மநாப விலாஸ அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

இப்புஸ்தகம் வெளிவர நேரிட்ட வரலாற்றைப்பற்றி விசாரித்ததில், புதுச்சேரியில் ஷை செட்டியார் ஒரு விசேஷ தனிகர் என்றும் அவர் வீட்டில் ஒருவர் இறந்துபோன காலத்தில் தன் சொந்த செலவில் பிரசுரித்தஷை மநுஸ்மிருதி ப்ரதி ஒன்றும் ஒரு ரூபா தக்ஷிணைவீதமும் வந்த ப்ராமணர்கள் ஒவ்வொருவருக்கும் இனாமாகக் கொடுத்தார் என்பதாகத் தெரியவருகிறது. இதை மொழிபெயர்க்க காரணமாகயிருந்த செட்டியாரும் அதை பிழை திருத்திய முதலியாரும் ப்ராமணரல்லாதார்கள். மநுஸ்மிருதி விஷயத்தில் அவர்களுக்கு எவ்வித த்வேஷமுமிருந்ததில்லையென்றும் அப்படிக்கிருந்தால் ஷை செட்டியார் ஒருக்காலும் இப்பெருங்கார்யத்தில் ஏராளமாகச் செலவுசெய்து பிரசுரித்திருக்க மாட்டாரென்பதுமே நமக்கு முதல் ருஜு.

பொதுவாக, ஸம்ஸ்கிருத பாஷையில் அதிக பரிசயமில்லாத அனேகருக்கு இந்த தமிழ்மொழிபெயர்ப்பு விசேஷ நன்மையைச் செய்துவந்திருப்பதாகவே சொல்லவேண்டும். ஸம்ஸ்கிருதம் நன்கறிந்த ப்ராமணவித்வான்களுக்கு தமிழ்பாஷையில் அர்த்தத்தை உள்ளபடி வெளிப்படுத்த தமிழில் பூர்ணபாண்டித்யம் இருக்குமென்று இப்பொழுதும்கூட நினைப்பதற்கில்லை. ஸம்ஸ்கிருதம் கலந்த கொச்சைத்தமிழாகத்தான் இருக்கும். இந்த தமிழ்நடையைத் திருத்தியமைப்பதற்காக ஏற்பட்ட ஷை சுப்பராய கவிராயர் ஷை மொழிபெயர்ப்பில் பலவிடங்களில் அனேக ஸம்ஸ்கிருத பதங்களை உச்சரிப்பும் அர்த்தமும் கெடும்படி செய்துவிட்டார். கொஞ்சம் ஸம்ஸ்கிருத பாஷா பரிசயமுள்ளவர்கள் மட்டுந்தான் இதைப்படித்து அர்த்தத்தை அறிந்துகொள்ளக் கூடும்.

மொழிபெயர்த்தவர் முகவுரையில் குல்லூகபட்டீயம், கோவிந்தராஜீயம், மேதாதிதீயம் என்ற மூன்று வியாக்கியானங்களை அநுஸரித்து அர்த்தம் செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இவர் மொழிபெயர்த்த காலத்தில் இந்த 3-வியாக்கியானங்களைத் தவிர மற்றும் மநுஸ்மிருதிக்குள்ள இதர நான்கு வியாக்கியானங்களாகிய ஸர்வஜ்ஞ நாராயணர், ராகவாநந்தர், நந்தனர், ராமச்சந்திரர் இவைகள் அவர்காலத்தில் அச்சிடப் படவில்லை இந்த 7-வியாக்கியானங்களையும் சேர்த்து ஒரே புஸ்தகமாய் கவர்

னர் ஜெனரல் ஸபையில் மெம்பராகவும் இன்னும் C. S. I, M. R, A. S. முதலான அனேக கௌரவ பட்டங்கள்பெற்ற ஆனரபிள் ராவ்ஸாஹெப் விசுவநாத நாராயண மண்டலிக் சர்மா என்ற ப்ராமண கனவானுடைய பெரும் முயற்சியால் 1886-ம் வருஷத்தில் பம்பாயில் நாகரலிபியில் அச்சிடப்பட்டது. இப்புஸ்தகம் தற்காலத்தில் கிடைப்பது அரிது. விசேஷமாய் எங்கும் ஸுலபமாய்க் கிடைக்கக்கூடிய குல்லூகபட்டருடைய வியாக்கியானம் ஒன்றைமாத்திரம்தான் பெரும்பாலும் பரிசீலனை செய்துவருகிறார்கள்.

மேலேகண்ட சுலோகத்தில் சொல்லிய ஏழுவகை வேலைக்காரர்களில் மூன்றாவதாகிய "க்ருஹஜன்" என்ற பதத்தைப்பற்றிய தமிழ்மொழிபெயர்ப்புதான் இவ்வளவு அனர்த்தங்களுக்கும் காரணமாக ஏற்பட்டது.

க்ருஹஜ: என்ற ஸம்ஸ்கிருத பதத்துக்கு க்ருஹே ஜாத (தன்) வீட்டில் பிறந்தவன் என்று அர்த்தம். ஸாவஜ்ஞநாராயணர் க்ருஹஜ: என்பதற்கு दासाज्जात: தாஸாஜ்ஜாத: வேலைக்காரனிடத்தில் பிறந்தவனென்றும், पैत्रिक: பைத்ரிக: என்பதற்கு पितृतो दायभागादागत: பிதுரார்ஜித சொத்திலிருந்து தன் வீதத்துக்கு பாகலப்தமாய்க் கிடைத்தவன் என்றும் அர்த்தம் செய்கிறார். மற்ற வியாக்கியாதாக்கள் பைத்ரிக: என்பதற்கு பரம்பரையாய் வேலைசெய்து வருகிறவன்என்று அர்த்தம் செய்கிறார்கள். இந்த வார்த்தையின் அர்த்தத்தைப்பற்றிஎவ்விததகரூரும்இல்லை. மற்ற ஐந்து வார்த்தைகளுக்கும் எல்லாவியாக்கியாதாக்களும் சற்றேறக்குறைய ஒரேவித அர்த்தத்தைத் தான் சொல்கிறார்கள். இதிலும் எவ்வித தகரூரும் இல்லை. இதன்படி ஷை சுலோகத்தின் அர்த்தம் என்னவெனில், 1. யுத்தத்தில் ஜயித்துக்கொண்டு வரப்பட்டவன். 2. பக்தியால் வந்தடைந்தவன். 3. வேலைக்காரன் மகன் 4. விலைக்கு வாங்கப்பட்டவன். 5. ஒருவனால் கொடுக்கப்பட்டவன். 6. பாகலப்தமாய் கிடைத்தவன். 7. தான் கொடுக்கவேண்டிய கடன்தொகையை ஈடு செய்வதற்காக வேலை செய்பவன் என்று வேலைக்காரர்கள் ஏழுவகை. இதற்கு இன்னொருவிதம்அர்த்தம் சொல்வதானால்ஒருவன் மற்றொருவனுக்குக் கட்டுப்படுவதற்கு மேற்சொல்லிய ஏழு அவஸ்தைகளில் ஏதேனும் ஒன்றிருக்கவேண்டும்.

இந்த வியாக்கியானம் அக்காலத்தில் மொழிபெயர்த்தவருக்கு கிடைத்திருந்தால் எவ்வளவோ நன்ருயிருந்திருக்கும்.

ராமச்சந்திரர் க்ருஹஜன் என்பவன் 7 வகை வேலைக்காரர்களில் ஒருவன் என்று மாத்திரம் சொல்லுகிருர், வேறு விசேஷ அர்த்தம் ஒன்றும் சொல்லவில்லை.

மேதாதிதி गृहज: என்பதற்கு दास्यां उत्पन्न: गर्भदास: தாஸ்யாம் உத்பந்ந: கர்பதாஸ: தாஸியிடம் உண்டானவனென்றும பிறப்பாலேயே தாஸன் என்றும் க்ருஹஜனுக்கும் மற்ற வேலைக்காரர்களுக்கும் வித்தியாசம் என்னவெனில் க்ருஹஜன் தன் தாஸியிடம் பிறந்தவனென்றும் மற்றவர்கள் காலக்ரமத்தில் வந்து சேருகிறவர்கள் என்றும் சொல்லுகிருர்.

ராகவாநந்தர் गृहज: என்பதற்கு दास्यां जात: தாஸியிடம் பிறந்தவனென்று சொல்லுகிருர்.

குல்லூகபட்டர், நந்தநர், கோவிந்தராஜர் இம்மூவரும் गृहज: என்பதற்கு தாஸீபுத்ரன் என்று வியாக்கியானம் செய்திருக்கிருர்கள்.

மேலே சொல்லிய ஐந்து வியாக்கியாதாக்களும் தாஸீ என்ற வார்த்தை ஸம்பந்தமுள்ள சற்றேறக்குறைய ஒரே அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதையே சொல்லுகிருர்கள்.

இப்பொழுது தாஸ: தாஸீ இவ்விருபதங்களின் அர்த்த விசாரம செய்வோம். தாஸ: எனபது புல்லிங்கம் (ஆண்பால்) இதற்கு தாஸீ என்பது ஸ்திரீலிங்கம் (பெண்பால்) தாஸ: என்கிற ஸமஸ்கிருத பதததுக்கு வேலைக்காரன் என்று தமிழ் அர்த்தம். தாஸீ என்கிற ஸம்ஸ்கிருத பதத்துக்கு வேலைக்காரி என்று தமிழ் அர்த்தம்.

தேவதாஸீ என்ருல் தேவரடியாள் (ஆலயத்தில் தொண்டு செய்பவள்) என்று தமிழர்த்தம். தேவரடியாள் என்ற வார்த்தை மருவி தேவடியாள் எனற கொச்சை வார்த்தை உபயோகத்திலிருந்துவருகிறது.

மேலேசொல்லிய ஏழு வியாக்கியானங்களிலும் தேவடியாள் என்ற அர்த்தத்தைக கொடுக்கக் கூடிய தேவதாஸீ என்ற பதம் இல்லவேயில்லை, தாஸீ என்ற தனிப்பதமே இருப்பதால் "வேலைக்காரி" என்றே அர்த்தம்.

தாஸீ என்பதற்கு வேலைக்காரி, சூத்திரனுடைய மனைவி, செம்படவன் மனைவி, பலிபீடம், வியபிசாரி என்ற அர்த்தங்கள் இருக்கின்றன.

குல்லூகபட்டர், நந்தநர், கோவிந்தராஜர் இம்மூவருடைய வியாக்கியானங்களில் दासीपुत्रः என்ற समस्तपदं Compoundward பகாப்பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வேலைக்காரியின் மகன் என்றே அர்த்தம். இதைப்பற்றி ஸந்தேஹமுள்ளவர்கள் தகுந்த ஸம்ஸ்கிருத நிகண்டுகளை ஆராய்ச்சிசெய்துபார்த்து உண்மை தெரிந்துகொள்ளட்டும்.

மநு, அத்தியாயம் 8, சுலோகம் 410-ல்

दास्यं शूद्रं द्विजन्मनाम् ।   𑌦𑌾𑌸𑍍𑌯𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ।

தாஸ்யம் சூத்ரம் த்விஜந்மநாம த்ரைவர்ணிகர்களுக்கும அதாவது ப்ரஹ்ம, க்ஷத்ரிய, வைசிய இம்மூன்று வர்ணத்தாருக்கும், ராஜா சூத்ரனை "தாஸ்யம்" பணிவிடை செய்யச் செய்யவேண்டியது.

மநு அத 2. சுலோகம் 32

शर्मवद्ब्राह्मणस्य स्याद्राज्ञो रक्षासमन्वितम् ।
वैश्यस्य पुष्टिसंयुक्तं शूद्रस्य प्रेष्यसंयुतम् ॥

𑌶𑌰𑍍𑌮𑌵𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌰𑌕𑍍𑌷𑌾𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌯𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ॥

இதற்கு குல்லூகபட்டர் யமஸ்மிருதி வசனத்தையும் விஷ்ணுபுராண வசனத்தையும் அநுஸரித்து ப்ராம்மணனுக்கு சர்மா, க்ஷத்திரியனுக்கு வர்மா, வைச்யனுக்கு பூதி அல்லது குப்தன், சூத்ரனுக்கு தாஸன் என்பதையும் சேர்த்து பெயரிடவேண்டுமென்றும் உதாரணம் சுபசர்மா, பலவர்மா, வஸுபூதி, தீநதாஸன் என்று சொல்கிறார். மநு, அத்தியாயம் 1, சுலோகம் 91.

एकमेवतु शूद्रस्य प्रभुः कर्म समादिशत् ।
एतेषामेव वर्णानां शुश्रूषामनसूयया ॥

𑌏𑌕𑌮𑍇𑌵𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌾𑌦𑌿𑌶𑌤𑍍 ।
𑌏𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌮𑌨𑌸𑍂𑌯𑌯𑌾 ॥

முதல் மூன்று வர்ணத்தாருக்கும் அஸூயையன்றியில் சுச்ருஷை செய்வதை ப்ரஹ்மா சூத்ரனுக்கு முக்கியமான தர்மமாக ஏற்படுத்தினார்.

ஆகையால் "தாஸன்" என்பது சூத்ரவர்ணத்தார் யாவருக்கும் பொதுப்பெயர் என்றும் அவர்கள் முதல் மூன்று வர்ணத்தாருக்கும் "தாஸ்யம் அல்லது சுச்ரூஷை" செய்யவேண்டுமென்றும் ஏற்படுகிறது.

மற்றும் மநுஸ்மிருதியில் இன்னும் அநேக இடங்களிலும் மற்றுமுள்ள ஸ்மிருதிகளிலும் சூத்ரன் என்ற பதம் காணப்படுகிறது. ஒரு இடத்திலாகிலும் சூத்ரன் என்பதற்கு தேவடியாள் மகன் என்றாவது வேசிமகன் என்றாவது அர்த்தம் கிடையவே கிடையாது. மேற்கண்ட வியாக்கியானங்களில் சொல்லிய தாஸீ என்ற பதத்துக்கு வீட்டில் வேலைசெய்யும் சூத்ரவேலைக்காரி என்றுதான் அர்த்தம்.

ஆகையால் தகருரிலுள்ள 415-வது சுலோகத்துக்கு மேற்கண்ட ஐந்து வியாக்கியானங்களையும் அநுஸரித்து அர்த்தம் என்னவெனில்

1. யுத்தத்தில் ஜயித்துக்கொணடுவரப்பட்டவன், 2. பக்தியால் வந்தடைந்தவன், 3, (தன்) வீட்டிற் பிறந்தவன், அல்லது (தன்) வேலைக்காரி மகன், 4. கிரயத்துக்கு வாங்கப்பட்டவன், 5. ஒருவனுல் இனமாகக் கொடுக்கப்பட்டவன், 6. பாம்பரையாக வேலை செய்து வருகிறவன், 7. தான் கொடுக்க வேண்டிய அபாரதம் அல்லது கடனுக்கு ஈடு செய்வதற்கு வேலை செய்கிறவன், என்று வேலைச்காரர்கள் எழுவகை.

ஆகையால் இந்த சுலோகமானது, ஒருவன் அன்னியனுக்கு 'தாஸ்யம் (Bonbage) கட்டுப்பட்டு வேலை செய்தல் இவ்வேழு வகைக்குள் ஒன்ருகத்தான் இருக்கவேண்டுமென்று நிரூபிப்பதற்கு முன்வந்ததேயொழிய சூத்ர என்ற சொல்லின் அர்த்தத்தை நிரூபிக்க வந்ததல்ல.

மேற்கண்ட சுலோகத்தின் அர்த்தத்தில் நியாயவாதிகள் எவரும் எவ்வித ஆக்ஷேபமும் சொல்லமுடியாதென்பது நிச்சயம்

மொழிபெயர்த்த அய்யங்கார் பிராம்மணன் அவர் சொல்லும் மூன்று வியாக்கியானங்களின்படி, க்ருஹஜ: என்பதற்கு குல்லூகபட்டரும் கோவிந்தராஜரும் சொல்லியது தாஸீபுத்ர: மேதாதிதி சொல்லியது தாஸ்யாம் உத்பந்ந: இவைகளை அநுஸரித்து வேறு ஸரியான வார்த்தை அவருக்குத் தோன்ருமல் ஸம்ஸ்கிருதமும் தமிழுமாகக் கலந்த "தன் தாஸிமகன்" என்று எழு

திக்கொடுத்திருக்கிறார். இம்மொழிபெயர்ப்பை ஸம்ஸ்கிருதம் கலப்பில்லாமல் செந்தமிழ்எளிய இனியநடையில்செய்வதற்குஏற்ப ட்ட சுப்பராய கவிராயர் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியச் செய்வதாக எண்ணி, 50-வருஷங்களுக்குப் பின் வரப்போகும் பிராமணத்வேஷத்தை அறியாமல், தன் தாஸிமகன் என்பதை தன் தேவடியாள் மகன் என்று திருத்திவிட்டார். இதனால் வந்த அனர்த்தம்தான் இவ்வளவு தூரம்.

இதுஎதைப்போலிருக்கிறதென்றால்சென்னையில்ஹாமில்டன் வாராவதி (Hamiltiou Bridge) என்றிருப்பதை, அறியாத ஜனங் கள் அம்பட்டன் வாராவதி என்று சொல்லி வழக்கத்துக்கு வந்து கடைசியாக இப்பொழுது முனிஸிபாலிடியிலும் அதற்கு (Barbers Bridge) என்று பெயர் கொடுத்துவிட்டதைப்போலிருக்கிறது. ஷை மநுஸ்மிருதி தமிழ்மொழிபெயர்ப்பில் ஷை சுப்பராய கவிராயரின் வேலையைப் பக்கம் தவறாமல் காணலாம்.

அன்றியும், 415-வது சுலோகத்தில் "யுத்தத்தில் ஜயித்துக் கொண்டுவரப்பட்டவன்" என்று சொல்லியிருக்கிறது. பிராம்மணன் ஒருகாலத்திலும் ராஜாவாக இருந்ததில்லை. இவனுக்கு யுத்தத்தில் ஜயிக்கப்பட்டவன். எப்படி வேலைக்காரனாக ஆகக் கூடும்? இதை ஏன் பிராமணத்வேஷிகள் நினைத்துப்பார்க்கவில்லை தவிர, 414, 415, 416, இந்த மூன்று சுலோகங்களும் முதல் மூன்று வர்ணத்தாருக்கும் பொதுவேயொழிய, இவைகளில் ப்ராம்மணன் என்கிற வார்த்தையே கிடையாதென்பதை இப்பொழுதாவது விப்ரத்வேஷிகள் நன்கு படித்துப்பார்த்து இனியாவது வீணாக தூற்றாமலிருப்பார்களா? வாதத்தை நீக்க மருந்துண்டு அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பதுபோல், ஏதோ ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு முகாந்தரமன்னியில் ப்ராம்மணர்களைத் திட்டுவது என்ற பிடிவாதத்தை நிவர்த்திக்கமருந்தில்லை. ஸந்தேகத்தை நிவர்த்தித்துக்கொள்ள இஷ்டமுள்ளவர்களுக்கு ஷை 415-வது சுலோகத்திற்கு அடியிற் கண்ட இங்கிலீஷ் மொழி பெயர்ப்புகளையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1. (By Manmatha Nath Dutt, M.A. Author of English Translation of 20 Smritis and other Sanskrit works, 1909,)

"A Captive of war, a slave for Maintenance, *The son of a famale slave*, one Purchased for money, a slave obtained as a present, a heriditary one, one condemned to slavery for any offence. these are the seven kinds of slaves (Lit, sources of slavery)"

2. (S. B. E. Vol. XXV 1886, The Lamrs of Manu translated with extracts from 7 commentaries by G. Buhler)

"There are slaves of seven kinds, (Viz) he who is made a captive under a standard, he who serves for his daily food, *He who is born in the house*, he who is bought and he who is given, he who is inherited from ancestres and he who is enslaved by way of Punishment."

T, S. நடேசசாஸ்திரியார்,
"வால்மீகி" மாயவரம்,

## கலிரிஷிரோகமும் கசடற்ற தீர்மானமும்.

தற்காலம் லோகோபகாரியென நினைத்து சில கலியுக ரிஷிகள் ஆங்காங்குதோன்றி திக்விஜயம் செய்வதின் பயனுப் ஸமத்வம் தீண்டாமை என்ற புதிய கலியுக ரிஷிரோகம் தோன்றித் தற்காலம் தேவாலயம் பிராம்மணசமுதாயம் இவைகளைப் பீடிக்கத் தொடங்கி விட்டது.

நமது பூர்வீக ரிஷிகள் வெகு உக்கிரமாகத் தபசுசெய்து திவ்ய ஞானம் பெற்று மிகவும் ரகசியமாகிய வேததத்துவார்த் தங்களை தெய்வ சக்தியால் ஸ்மிருதி புராணங்கள் மூலமாகச் சிமப்பட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இக்கலி ரிஷிகளோ மிக்க அசாத்திய சக்திவாய்ந்தவர்களாய்த் தபசு என்ற பெயர் சொல்லாமலேயே அபேத ஞானமடைந்து சமத்வஸ்தானத்தில் நிலை பெற்று சுருதி ஸ்மிருதிகளில் தங்கள் இஷ்டப்படிஸ்வதந்திரமாக சீர்திருத்தியும் தங்கள் இஷ்டத்திற்கு விரோதமானவைகளை முற்காலப் பிராமணமதஸ்தாபனர்கள் திட்டு ஜாதி மேன்மை. இவைகளைத் தங்கள் அபிப்பிராயப்படி ஸ்மிருதி கிரந்தங்களின் நடுவில் என்றும் அறிபாத விதமாய் எழுதி சேர்த்து வைத்திருக்கிறார்கள்

என்றும் அவை தற்கால நாகரீகத்திற்கு உசிதமில்லையெனக்கருதி அம்மாதிரியான "போலிஸ்மிருதி" வாக்கியங்களை நம்பக்கூடாது என்று தமக்குள்ளேயே முடிவான தீர்மானம் செய்து பாதாளவாசிகளான மனிதர்களை ஸ்வர்க்கவாசிகளாகச் செய்ய யோக்கிதாபத்ரம் வழங்கி வருகிற காரணமாக "ப்ளேக்" என்ற நவீன ரோகத்தைப் போல கலிரிஷிரோகம் நாளுக்குநாள் பரவ ஆரம்பித்துவிட்டது. இச்சமயம் நாம் அஜாக்கிரதையாக இருந்தால் அநேக ஆபத்துக்கு உள்ளாய்விடுவோம் என்றதையும் இம்மாதிரியான வியாதிகள் வந்தால் உடனே அப்புறப்படுத்த வழிதேடுவதானது அத்தியாவசியமென்ற வைத்திய சிரேஷ்டரின் அபிப்பிராயத்தைக்கொண்டும் இம்மஹா வியாதியின் கெட்ட குணத்தை அறிவிக்கவேண்டியும் நினைத்தவனாய் ஸர்வசம்மதமாகிய சர்வேசுவரனுடைய சட்டரூபமான இதிஹாஸமொன்றை எழுதலானேன். இந்த இதிஹாஸமானது பார்லிமெண்ட் தீர்ப்புக்கு ஸமானமானது என்பதற்குச் சந்தேகமில்லை என்பதானது இதின் மூலமாகவே தெரியவரும்.

பூர்வத்தில் பிரம்மபுத்திரனை "க்ஷுவன்" என்ற ஒரு அரசனுக்கு "ததீசி" என்ற பிராமணசிரேஷ்டர் வெகு சிநேகமாக இருந்து வந்தார். ஒருக்கால் இவர்களுக்கு தபசு விஷயமான பிரசங்க காரணமாகப் பெரிதான விவாதம் ஒன்றுதொடங்கி அது மகா அநர்த்தமாக பாவித்தது. வேதமறிந்த 'ததீசி' முனிவர் மூன்று வர்ணங்களுள் "விப்பிரன்" சிரேஷ்டர் என்றார். அப்போது தனமதத்துடன் கூடின "க்ஷுவராஜன்" ஒரு ராஜாவானவன் 'மஹாவிஷ்ணு' அஷ்டதிக் பாலர்கள் இவர்களுடைய அம்சத்தைப் பெற்றவனென்று சுருதிகள் சொல்வதால் க்ஷத்ரியனே சிரேஷ்டன் வேணுமானால் விசாரித்துப்பாருங்கள் என்றார்.

"சுருதி ஸ்மிருதி"க்கு விரோதமான இவ்வாக்கியத்தைக் கேட்ட ரிஷி அதிக கோபமடைந்து தனது கை முஷ்டியால் ராஜன் சிரஸில் அடித்தார், ராஜனும் அதிக கோபம் கொண்டு தன் வஜ்ராயுதத்தால் "ததீசி"யை அடித்தார். அந்த அடியால் ரிஷி மூர்ச்சையடைந்து தன் பிதாவாகிய சுக்கிராசாரியரை நினைக்க அவர் வந்து வஜ்ஜிராயுத அடியால் கெடுதல் அடைந்த அங்கங்களைச் சேர்த்து மிருத்யுஞ்ஜய மந்திரத்தை அபிமந்திரணம் செய்து முன்னிருந்தபடி ரிஷி சரீரத்தை அனுக்கிரஹம் செய்து குழந்

தாய்! இந்தமந்திரமானது மிகவும் சிரேஷ்டமும் பரமேசுவரப்ரீதி மிருத்தியுஞ்சயம், பலம், ஆநந்தம், இவைகளை உண்டாக்கக்கூடியதும் ஆகும். அனதுபற்றி அதை இப்போது உனக்கு உபதேசம் செய்கிறேன். அந்த மந்திரத்தை சிவசந்நிதியில் ஜெபித்தும், ஹோமம் செய்தும் ஜலத்தில் அபிமந்திரணம் செய்தும் தினமாகப் பிராசனம் செய்து சிவனைத் தியானம்செய்துவந்தால்மிகக்குணம் பெறுவாய் என்று சொல்லி அம்மந்திரத்தையும் அதன் நியாசம் தியானம் இவைகளையும் உபதேசித்துச் சென்றார். பிறகு ததீசியும் மிகச் சந்தோஷத்துடன் தபோவனம் சென்று ஜெபம் செய்து வந்தார். அதனால் மிகச்சந்தோஷமடைந்த பரமசிவன் ரிஷி முன்னிலையில் பிரத்தியக்ஷமாய் உன் தவத்தால் மிகச் சந்தோஷமடைந்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள் என்றார். உடனே ரிஷியும் மிக்க வணக்கத்துடன் "ஸ்வாமிந்" எனக்கு வஜ்ஜிராயுதத்திற்குச் சமமான அஸ்தியையும் ஒருவராலும் கொல்லத்தகாததன்மையையும் எல்லோராலும் பூஜிக்கத் தகுந்த வைபவத்தையும் அனுக்கிரகிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அவ்விதமே பகவானும் அநுக்கிரகம் செய்துவிட்டு மறைந்து விட்டார். பிறகு மிகவும் சந்தோஷப்பட்டு ரிஷி அக்ஷணமே க்ஷுவராஜனிடம் சென்று ராஜனுடைய சிரசில் தன் குதிகாலால் அடித்தார். அப்போது ராஜனும் தான் விஷ்ணுபக்தன் என்ற கௌரவம் அடைந்து முன்போலவே வஜ்ஜிராயுதத்தால் அந்த ரிஷியை அடித்தார். அந்த அடியால் ரிஷிக்கு ஒருவிதக்கெடுதலும் ஏற்படாததுகண்டு ராஜனுக்கு ஆச்சரியமுண்டாய் தன் ஈசனாகிய மஹாவிஷ்ணுவை நினைக்க அவர் எதிரில் வர நானாவித வாக்கியங்களால் ஸ்தோத்திரம் செய்து 'ஸ்வாமிந்' எனது பால்ய சிநேகிதரும் தர்மம் அறிந்தவரும் மிக்க வணக்கமுள்ளவரும் "ததீசி" என்ற நாமம் பூண்டவரும் ஆகிய ஒரு பிராமணன் இருக்கிறார். அவர் பரமசிவனை உத்தேசித்துத் தபசு செய்து மிருத்யுஞ்ஜய மந்திரபலத்தால் வஜ்ஜிரதுல்யமான சரீரம்பெற்று சபையில் என்னைக் காலால் அடித்து அவமானஞ்செய்து கெர்வத்தால் எனக்கு ஒருவரிடத்திலும் பயமில்லை என்றும் சொன்னார் என்றார். அதைக்கேட்ட பகவான் இதன் காரணத்தை அறியவிரும்பி மனதால் சிவனை தியானம் செய்து சிவசங்கல்பத்தை அறிந்து 'க்ஷுவ' ராஜனைப் பார்த்துச் சொல்வதாவது.

विप्राणां नास्तिराजेंद्र भयमण्वपि कुत्राचित् ।
विशेषाद्रुद्रभक्तानां भयन्नास्ति च भूपते ॥

விப்ராணாம் நாஸ்திராஜேந்த்ர பயமண்வபி குத்ராசித் ।
விஶேஷாத்ருத்ரபக்தாநாம் பயந்நாஸ்தி ச பூபதே ।

ஹே ராஜேந்திர பிராமணர்களுக்கு ஒரு இடத்திலும் பயம் கிடையாது அவ்விதம் இருக்குமகால விசேஷமாகப் பரமசிவன் பக்திகூட அத்துடன் சேர்ந்துவிட்டால் பூபதே! அவர்களுக்கு பயம் ஏது என்று சொல்லி பின்னும் ஒரு பிராமணனுக்கு துக கத்தைச் செய்தால் அது சாபகாமாகுமென்று இருப்பதாலும் நீ எனக்குப் பரம பக்தனுக இருப்பதாலும் அத்துடன் பக்தவத் ஸலன் எனற நாமமும் எனககு ஏற்பட்டிருப்பதாலும் பிராமண சாபம தற்காலம் எனக்குவந்தாலும பக்தனுக்குக கட்டுப்பட்ட வன் என்பதை உலகில் காண்பிப்பதற்காக அவருடன் நான் யுத்தம் செய்து உன் அவமானத்தைநிவர்த்திசெய்கிறேன். ஆனுல் எனக்கு ததீசியின் சாபம் ஏற்பட்டு அதன் மூலமாய் தக்ஷயாகத் தில்வீரபத்திரனுல் எனக்கு அபஜயம் உண்டாகுமென்று பகவான் சொல்லி க்ஷுவ ராஜனுடைய ஹிதத்தைக் கருதி ஒரு பிராமண ரூபம் தரித்து ததீசி ஆசிரமம் சென்று அவரை ஒருவரமவேண்டு மென்று கேட்டார். அப்போது திரிகாலத்தையும் அறிந்தஅந்த ரிஷி சற்று நிதானித்து ஹே விஷ்ணே! உம்முடைய மாயாவிலா ஸத்தை நன்கு அறிவேன். எதற்காக இந்தப பிராம்மணரூபம் தரிததீர். உமமுடைய சொந்த ரூபத்தை அடைந்து ஸாக்ஷாத் சங்கானே தியானம் செய்யும். எனககு இந்த ஜகத்தில் சம்புவின் கிருபாவிசேஷத்தால் தைத்யதாநவாதியால் யாதொரு பயமும் இலலை என்று நிர்பயமாகவும புன்சிரிப்புடனும் சொன்னுர். இதைக் கேட்ட பகவான் அதிக கோபமடைந்து தனது சகரா யுதததால் ரிஷியை அடித்தார். அப்போது சக்கிரததினுடைய சக்தியானது குறைந்துபோனதேயொழிய ஈசன் அருளால் ரிஷி க்கு யாதொரு கெடுதலும் ஏற்படவிலலை. அக்காலத்தில் ரிஷி யானவர் ஹே விஷ்ணே! பூர்வததில இந்த சுதர்சந சககிரமா னது பகவானுல் உமககுக் கொடுககப்பட்டதுபற்றி அந்த சககா மானது அவாது கருணேககுப்பாத்திரனுன என்னிடத்தில் பிரயோ ஜனப்படமாட்டாது எனருர். அதைக்கேட்டு அதிக கோபம அடைந்த விஷ்ணு பிரமமாஸ்திரம்முதலான அஸ்திரங்களையும் அக் காலத்தில் மஹாவிஷ்ணுவுக்குச் சகாயமாக இந்திரன் முதலான சகலதேவதைகளும் தங்களுடைய அஸ்திரங்களையும் இந்தப்பிரா ம்மணனிடம் பிரயோகித்தார்கள். அக்காலத்தில் அந்தப் பிரா மணனும் ஒரு பிடி தர்பத்தையெடுததுத் தன எதிரில வைககு அது ஈசன அருளால திவய சூலாயுதமாகபாவித்து காலாக்னிககு துலயமாய் பிரகாசித்துநிற்க அக்காலத்தில் விஷ்ணு, தேவேந்தி ரன் இவர்களால் பிரயோகிக்கபபட்ட சகல அஸ்திரங்களும் அந்த சூலததில் வந்து சரணம் புகுந்தன.

அதைக்கண்ட ஸகல தேவதைகளும் பயந்து தங்கள் இருப் பிடம் போனுர்கள். விஷ்ணு தனது மாயாபலததால் அவ்விடத்

173 174
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை ஆர்ப்பாக்கம்.



தில்தனக்குத்துல்யமான அநேகலக்ஷம் சைந்நியங்களை சிருஷ்டித்தார். அவர்களும் "ததீசி"யின் சிவதேஜஸ்ஸால் நாசத்தை அடைந்தார்கள். அதைக்கண்ட பகவான் தன் மாயாபலத்தால் "விராட்" ரூபம் தரித்து அதில் ஸகல அண்டங்களையும் ரிஷி பார்க்கும்படி செய்தார். அதைக்கண்ட ரிஷி ஹே விஷ்ணோ உம்முடைய மாயையை நான அறிவேன் இதோ என்னுடைய சரீரத்தில் பிரும்மா ருத்திரன் தேவர்கள் முதலான பேர்களுடன் ஸகல ஜகத்தையும் பாரும் திவ்யதிருஷ்டியை அளிக்கிறேன் என்று தனது சரீரத்தில் ஈசனருளால் காண்பித்து, தனது தேஜஸ்ஸால் விஷ்ணுவையும் தபிக்கும்படி செய்தார். அப்போது "க்ஷுவன்" முதலியவர்கள் இந்தப் பிராமணனை ஜயிப்பது சாத்தியமில்லை என்று அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தார்கள். அப்போது ரிஷியானவர் ஹே தேவர்களே மஹாவிஷ்ணுவுடன் தக்ஷயாகத்தில் ருத்திரகோபாக்னியால் விரட்டப்பட்டவர்களாகப் பலிப்பீர்களென்று சபித்துவிட்டு க்ஷுவராஜனைப் பார்த்து

देवैश्च पूज्योराजेन्द्र नृपैश्चैव द्विजोत्तमः ।
ब्राह्मणाएव राजेन्द्र बलिनः प्रभविष्णवः ॥
इत्युक्त्वा सस्फुटं विप्रः प्रविवेशनिजाश्रमम् ।
दधीचमभिवन्द्यैव क्षुवोनिजगृहं गतः ॥

தேவைச்ச பூஜ்யோராஜேந்த்ர ந்ருபைச்சைவ த்விஜோத்தம: ।
ப்ராஹ்மணாஏவ ராஜேந்த்ர பலிந: ப்ரபவிஷ்ணவ: ॥
இத்யுக்த்வா ஸஸ்புடம் விப்ர: ப்ரவிவேசநிஜாச்ரமம் ।
ததீசமபிவந்த்யைவ க்ஷுவோநிஜக்ருஹம் கத: ॥

ஹே ராஜேந்திரா! தேவர்களாலும ராஜாக்களாலும் பரம சக்திவாய்ந்த பிராமணர்கள பூஜிக்க தகுந்தவர்களென்றுசொல்லி ததீசி தன் ஆசிரமத்தை அடைந்தார். க்ஷுவராஜனும ரிஷியை நமஸ்கரித்து அனுக்கிரஹம் பெற்றுக்கொண்டு தனது அரண்மனைக்கு ஏகினர். இந்த இதிஹாசத்தால் ஸர்வேசுவரன் மஹாவிஷ்ணுவையும சகல தேவர்களையும் காரணமாகக் கொண்டு ஆதிகாலத்தில் ஒரு பெரிய வியவஹாரம் நடத்திப் பிராம்மணன் பரம சக்தி வாய்ந்தவன் பூஜிக்கத் தகுந்தவன என்று அநுக்கிரஹம் செய்தார். அதை நமது முன்னோர்களான ரிஷிகள் முதல் நாம் கையாண்டு வருகிற காரணத்தால் பிராம்மணனு பூஜ்யன் என்ற ஸர்வேசுவர நியமனத்தை அநுஸரித்து நாமும சக்திபெறவேண்டி சன்மார்க்கத்தை அநுஸரித்து நடந்து வருவோமானால் க்ஷிப்ரரோகமானது அக்னியைக் கண்ட பஞ்சுபோல நாசமடைந்து ததீசி மஹரிஷியைப் போல நாமும் சக்திபெற்று விளங்குவோம் என்பதில் சந்தேகமில்லை, சுபம்!

K. S. சங்கராமசாஸ்திரி,
கொட்டாரக்கரை